மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் மாசி மாதம் 29–ம் நாள்
2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் செவ்வாய் கிழமை

**IA 4/2024 /in/ OS 98 /2019**

1. ராசுத்தேவர்
2. பழனிச்சாமி :: மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள்

**/எதிர்/**

ராமசாமி :: எதிர்மனுதார் / வாதி

---------

இம்மனுவானது 07–03–2024–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. முருகதினகரன், M.B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.ஜோதிமுருகதாஸ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

உத்தமபாளையம் குறுவட்ட அளவர் வேல்முருகன் அவர்கள் வழக்குரை சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கோப்புகளுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதார்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிடவேண்டி O16R1(3) பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்.

அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்குரை சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆணையர் அறிக்கையுடன் குறுவட்ட அளவர்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.03.12 18:47:25 +0530

வேல்முருகன் அவர்களும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அறிக்கை நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.3 அறிக்கையில் குறுவட்ட அளவர் வேல்முருகன் சர்வே எண். 453/40−ன் அளவுகள் பற்றியும் , புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்புகள் குறித்தும் தெளிவாக குறிப்பிடப்படாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, நீ.ம.சா.ஆ.3 வழங்கிய குறுவட்ட அளவர் வேல்முருகன் அவர்களை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் , குறுவட்ட அளவர் வேல்முருகன் வழக்குரை சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கோப்புகளுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதார் / வாதி தரப்பு எதிருரை சுருக்கம்</u>

சர்வேயரான அரசு அதிகாரியை நீதிமன்ற சாட்சியாகதான் விசாரிக்க இயலும். அவ்வாறு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்றால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்ற பின்னர்தான் விசாரிக்க இயலும். மனுதார்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்படாத நிலையில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதும், உரிய சட்டப்பிரிவின் கீழ் தாக்கல் செய்யாததும் ஏற்புடையதல்ல. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் , சான்றாவணங்கள் இல்லை.

6) **<u>பிரச்னைக்கான தீர்வு:</u>**

மனுதார்கள் தரப்பில் அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்குரை சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆணையர் அறிக்கையுடன் குறுவட்ட அளவர் வேல்முருகன் அவர்களும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அறிக்கை நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுஎ ன்றும், நீ.ம.சா.ஆ.3 அறிக்கையில் குறுவட்ட அளவர் வேல்முருகன் சர்வே எண். 453/40−ன்

அளவுகள் பற்றியும் , புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்புகள் குறித்தும் தெளிவாக குறிப்பிடப்படாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, நீ.ம.சா.ஆ.3 வழங்கிய குறுவட்ட அளவர் வேல்முருகன் அவர்களை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதார் / வாதி தரப்பில் சர்வேயரான அரசு அதிகாரியை நீதிமன்ற சாட்சியாகதான் விசாரிக்க இயலும் என்றும், அவ்வாறு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்றால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்ற பின்னர்தான் விசாரிக்க இயலும் என்றும், மனுதார்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்படாத நிலையில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதும், உரிய சட்டப்பிரிவின் கீழ் தாக்கல் செய்யாததும் ஏற்புடையதல்ல என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் அசல் வழக்கானது 2019–ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக வழக்கானது நிலுவையில் உள்ளது என்பது தெரியவருகிறது. இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் நீ.ம.சா.ஆ.3 அறிக்கை வழங்கிய குறுவட்ட அளவர் தனது அறிக்கையில் சர்வே எண்.453/40–ன் அளவுகள் மற்றும் அமைப்புகள் குறித்து தெளிவாக குறிப்பிடவில்லை என்றும் , எனவே நீ.ம.சா.ஆ.3 அறிக்கையை பொறுத்து குறுவட்ட அளவர் வேல்முருகன் அவர்களை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதார் தரப்பில் அரசு அதிகாரியான குறுவட்ட அளவரை நீதிமன்ற சாட்சியாகத்தான் விசாரிக்க இயலும் என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) சர்வே எண்.453/40 என்பது வழக்குரை சொத்து சம்பந்தப்பட்ட சர்வே எண்ணாக உள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி குறுவட்ட அளவரை சாட்சியாக விசாரிக்கும் பட்சத்தில் வழக்குரைச் சொத்து குறித்த அமைப்பு மற்றும் அளவுகள் பற்றி தெளிவுபடுத்தவும், வழக்குப் பெருக்கம்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.03.12 18:47:32 +0530

ஏற்படாமல் இருக்கவும் உதவியாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வழக்கில் இரு தரப்பினருக்கும் போதிய வாய்ப்பளிக்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமானதாக உள்ளது என்பதாலும், குறுவட்ட அளவரை சாட்சியாக விசாரணை செய்யும்போது அதனைப் பொறுத்து எதிர்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புள்ளது என்பதாலும் , மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

10) இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 4/2024 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் எடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 12-03-2024-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.03.12 18:47:38 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

I.A. 4/2024
in
O.S. 98 / 2019
FAIR / DRAFT ORDER
Date : 12-03-2024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் மாசி மாதம் 29–ம் நாள்
2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>IA 4/2024 /in/ OS 98 /2019</u>**

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆனைமலையன்பட்டி கிராமம், வார்டு–2, மந்தையம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் வீரணத்தேவர்அவர்களின் மகன் இந்து சுகவாசம் சுமார் 78 வயதுள்ள ராசுத்தேவர். |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆனைமலையன்பட்டி கிராமம், வார்டு–2, மந்தையம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் வீரணத்தேவர்அவர்களின் மகன் இந்து சுகவாசம் சுமார் 73 வயதுள்ள பழனிச்சாமி. |

.... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆனைமலையன்பட்டி கிராமம், வார்டு–2, கதவு எண்.37, மந்தையம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமித்தேவர் மகன் இந்து சுகவாசம் சுமார் 71 வயதுள்ள ராமசாமி. |

.. எதிர்மனுதார் / வாதி

உத்தமபாளையம் குறுவட்ட அளவர் வேல்முருகன் அவர்கள் வழக்குரை சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கோப்புகளுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதார்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிடவேண்டி O16R1(3) பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 16–02–2024 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/– செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 07–03–2024–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. முருகதினகரன், M.B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.ஜோதிமுருகதாஸ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை

செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**நிறைவேற்றாணை**

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 4/2024 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

**செலவுத் தொகை இல்லை**

2024–ம் வருடம் மார்ச் மாதம் 12–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது. (12–03–2024)

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.03.12 18:47:45 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்***.

IA 4/2024/in/OS 98/2019
EX ORDER
Date : 12–03–2024